திரு. வே. தங்கப்பாண்டியன் : அரசு உயர்நிலைப் பள்ளிகள் முழுவதும், மாநிலத்தில் பின்தங்கிய பகுதியான கிராமங்களில் அமைந்திருக்கின்றன. 25 ஆயிரம் ரூபாய் கட்ட வேண்டுமென்ற நிபந்தனை இருக்கிற காரணத்தால், அந்த வாய்ப்பு அரசாங்கப் பள்ளிகளுக்குக் கிடைக்காது என்ற நிலை ஏற்படும். ஆகவே இந்தப் பணம் கட்டுவதிலிருந்து அரசாங்கப் பள்ளிகளுக்கு விதி விலக்கு அளிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : விதிவிலக்கு என்று ஆரம்பித்தோமானால், பிறகு அதுவே விதியாக மாறிவிடும். ஆகவே மாண்புமிகு உறுப்பினரைப் போன்றவர்கள் முயற்சி எடுத்துக்கொண்டால், அதைக் கட்டுவது ஒன்றும் முடியாத காரியமல்ல.

திரு. எம். சங்கரலிங்கம்: இப்போது ஆரம்பிக்கின்ற கல்வித் திட்டத்தின் படி, பள்ளிகளில் இருக்கக்கூடிய தலைமையாசிரியர் முதுகலைப் பட்டம் பெறாமல் இருந்தால், அவருக்குப் பதிலாக வேறு ஒரு முதுகலைப் பட்டம் பெற்றவரைத் தலைமையாசிரியராகக் கொண்டு வருவதால், பிரச்னைகள் ஏற்படும். இதைத் தவிர்ப்பதற்காக, ஏற்கெனவே அந்தப் பள்ளியில் உள்ள தலைமையாசிரியரை நிர்வாகத் தலைமை ஆசிரியர் என்றும் Headmaster (Administration) புதிதாகக் கொண்டு வருபவரைத் தலைமையாசிரியர் (கல்வி) என்றும் Headmaster (Academic) நியமிக்க வேண்டுமென்ற கருத்து அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறதா? அதுபற்றி அரசு ஆராய்ந்ததா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அந்த அளவுக்கு இரண்டு தலைமையாசிரியர்களை நியமிப்பதென்பது நிதி வசதிக்கு ஒத்து வராது. அது சரியுமல்ல. தலைமை ஆசிரியர், உதவித் தலைமையாசிரியர் என்ற அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தைப் பரிசீலிக்கலாம்.

Aduthurai Paddy Research Centre.

* 147 Q.—Thiru K. S. MANI: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether 60 kilos of Paddy is given now for food to the staff of Aduthurai Paddy Research Centre, Thanjavur district and the cost thereof is recovered from their salary; and

(b) the quantum of paddy in kilograms given to the staff during the years 1972, 1973 and 1974?

1978 பிப்ரவரி 27]

ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலையம்.

திரு. கோ. சி. மணி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலையத்தில் பணி புரியும் அரசு ஊழியர்களுக்கு மாதந்தோறும் சம்பளத்தில் பிடித்துக் கொள்ளும் அடிப்படையில் அறுபது கிலோ நெல் சாப்பாட்டுக்கென தற்போது கொடுக்கப்படுகிறதா?

(இ) 1972, 1973, 1974 ஆகிய ஆண்டுகளில் அரசு ஊழியர்களுக்கு முறையே எத்தனை கிலோ நெல் கொடுக்கப்பட்டு வந்தது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) தஞ்சாவூர் மாவட்டம் ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலையத்தில் பணிபுரியும் அரசு ஊழியர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் மாதந்தோறும் சம்பளத்தில் பிடித்துக் கொள்ளும் அடிப்படையில் நபர் ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு 18 கிலோ நெல் வழங்கப்படுகிறது. இதன் அடிப்படையில் குடும்பம் ஒன்றுக்கு குறைந்த பட்சம் 40 கிலோ நெல்லும் அதிக பட்சமாக 110 கிலோ நெல்லும் வழங்கப் படுகிறது.

(இ) 1972-73, 1973-74 மற்றும் 1974-75 ஆம் ஆண்டுகளில் உணவுக்காக வழங்கப்பட்ட நெல்லின் அளவு முறையே பின்வருமாறு:—

1972-73—90,990 மெட்ரிக் டன்.

1973-74—69,080 மெட்ரிக் டன்.

1974-75—75,345 மெட்ரிக் டன்.

திரு. கோ. சி. மணி: 18 கிலோ நெல் அந்த ஊழியருக்கும், அவருடைய குடும்பத்தாருக்கும் எப்படி கட்டுப்படியாகும்? முன்பு 60 கிலோ, 80 கிலோ என்று வழங்கப்பட்டது. அதைப்போலவே இப்போது ஒரு குடும்பத்திற்கு 100 கிலோ என்று உயர்த்தும் எண்ணம் அரசுக்கு உண்டா? அது எப்போது முதல் அமுலுக்கு வரும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: ஒரு குடும்பத்திற்கு என்று 40 கிலோ முதல் 110 கிலோ வரையிலும் வழங்கப்படுகிறது என்று ஏற்கெனவே சொன்னேன். எனவே அவர்களுக்குப் போதுமான அளவுக்குக் கொடுக்கப் பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திரு. கோ. சி. மணி : வெளிச் சந்தையின் விலைக்குத்தான் இந்த நெல் விற்கப்படுகிறது என்று நினைக்கிறேன். கம்பெனியிலே பணியாற்றுகிறவர்களுக்கு அவர்கள் உற்பத்தி செய்கின்ற பொருள்களுக்கு அடக்கவிலை என்று நிர்ணயம் செய்து அந்த அடக்க விலைக்கு அவர்களுக்குக் கொடுத்து வருகிறார்கள். அதைப் போலவே நெல்லை உற்பத்தி செய்கிற இவர்களுக்கும் அடக்கவிலை நிர்ணயம் செய்து, சலுகை காட்டி, குறைந்த விலையில் நெல்லைத் தர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற யோசனையின்படிதான் 1976-77-ல் கிலோ ஒன்றுக்கு 80 பைசா விதம் அவர்களிடத்திலிருந்து விலை பெற்றுக்கொண்டு நெல் கொடுக்கப்பட்டு வருகிறது. மேலும் குறைத்துக் கொடுக்க வேண்டுமென்று சொன்னால், அது பற்றி அரசு ஆராயும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. எம். சங்கரலிங்கம்: இந்தச் சலுகை மாநிலத்தில் இருக்கின்ற இதர நெல் ஆராய்ச்சி நிறுவனங்களில் பணிபுரிபவர்களுக்கும் கொடுக்கப்படுகிறதா? இல்லையென்றால், எந்தெந்த ஆராய்ச்சி நிலையங்களுக்குக் கொடுக்கப்படாமல் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : எல்லா ஆராய்ச்சி நிலையங்களுக்கும் கொடுக்கப்பட்டு வருகிறது. கொடுக்கப்படாத ஆராய்ச்சி நிலையங்களுடைய குறிப்பு என்னிடம் இல்லை.

Commission to go into Economic Conditions of Agriculturists.

* 148 *Q.*—Thiru G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of the Government to constitute a Commission to go into the economic conditions of the agriculturists in the State; and

(b) if so, the details thereof?

விவசாயிகளின் பொருளாதார நிலைமைகளை ஆய்வு செய்ய ஆணைக்குழு.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம் மாநிலத்தில் உள்ள விவசாயிகளின் பொருளாதார நிலைமைகளை ஆய்வு செய்ய ஆணைக் குழு ஒன்றை அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?